1975 அக்டோபர் 25]

(முற்பகல் 9-30)

* 52 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், கடம்பூரில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) இந்நிலையத்திற்கு மருந்தகக் கட்டடம் பொதுப்பணித்துறையினரால் தற்போது கட்டப்பட்டு வருகிறது. மேற்படி கட்டட வேலை கூடிய விரைவில் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குளித்தலை, கரூர் வட்டங்களில் குட்டை அமைப்புத் திட்டங்கள்

* 53வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972 முதல் 1974 வரை குளித்தலை, கரூர் ஆகிய வட்டங்களில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட குட்டை அமைப்புத் திட்டங்களின் விவரங்கள் யாவை?

(இ) அவைகளில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) 1972 முதல் 1974 வரை குளித்தலை வட்டத்தில் 13 குட்டைத் திட்டங்களும், கரூர் வட்டத்தில் 15 குட்டைத் திட்டங்களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆக மொத்தம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட திட்டங்கள் 28 ஆகும்.

(இ) அவைகளில் குளித்தலை வட்டத்தில் 6 குட்டைத் திட்டங்களும், கரூர் வட்டத்தில் 4 குட்டைத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டன. ஆக மொத்தம் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் 10 ஆகும்.